பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 10 | செவ்வாய்க்கிழமை | 23.04.2024 | அதிர்வு 266

# யானை தாக்கி முதியவர் சாவு!

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் – ஆனமடுவ பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ரம்பேயாய பகுதியில் காட்டு யானை யின் தாக்குதலுக்கு இலக்காகி 06▶

# சு.கவைக் கைப்பற்ற மும்முனைப் போட்டி

## பதில் தலைவர் நியமனங்களால் பிளவடைந்த அணிகளுக்குள் முரண்பாடு உச்சம்





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்திருக்கும் பிரச்சினை காரணமாக அக்கட்சியைக் கைப்பற்றுவதற்கு மூன்று தரப்பி னர் களத்தில் இறங்கியுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க தலைமையிலான குழு, மைத்திரிபால சிறிசேன தலை மையிலான குழு மற்றும் தயாசிறி ஜயசேகர தலைமைமையி லான குழு போன்றன இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின் றன என்று தகவல்கள் கூறுகின்றன. 06▶

# முடியாட்சி தருவதாகக் கூறினாலும் திருடர்களுடன் 'டீல்' போட மாட்டேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சத்தியம்

""பூரண முடியாட்சியை எனக் குத் தருவதாகச் சொன்னாலும், திருடர்களுடன் ஒருபோதும் டீல் போட மாட்டேன். 220 இலட்சம் மக்களுடனே எனக்கு டீல் இருக் கின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார். 06▶



# ஈழ அகதிகள் மூவர் தமிழகத்தில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து அகதிக ளாக ஒரு சிறுவர் உட்பட மூன்று பேர் நேற்று தமிழகத்தின் தனுஸ்கோடி யில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கையில்ஏற்பட்டுள்ளபொரு ளாதார நெருக்கடி காரணமாக ஈழத் தமிழர்கள் அகதிகளாகத் தொடர்ச்சி யாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்தநிலையில், நேற்றுக் காலை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த ஒரு சிறுவர் உட்பட 3 பேர் தனுஷ்கோடி அடுத்த ஐந்தாம் மணல் 06▶




எது நடக்கும் என்று நேற்று இப்பத்தியில் எதிர்வு கூறினேனோ அதுவே நடந்து விட்டது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் இன்று நடை பெறவிருந்த மத்திய குழுக் கூட்டம் நடை பெறாது என்பதை கட்சி யின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் 'வருத்தத்தோடு' கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு அறி வித்துவிட்டார்.

சிறிதரன், சிறிநேசன், அரியநேத்திரன், யோகேஸ்வரன் போன்றோர் இன்று சித்ரா பௌர்ணமி என்பதால் இன்றைய கூட்டத் தில் பங்குபற்ற முடியாது என்று 'குறூப்' பாகத் தெரிவித்திருக்கும் நிலையில் கூட்டம் நடைபெறாமல் போகும் சாத்தியமிருப் பதாக நேற்றுக் கோடி 06▶

# ரணில் - பஸில் இடையே இன்று முக்கிய சந்திப்பு

## தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்ப்பு



**ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான தீர்க்கமான சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.**

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையிலேயே மொட்டுக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் பற்றி முடிவெடுக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

இதற்கு முன்னரும் ரணிலுக்கும் பஸிலுக்கும் இடையில் இரு சந்திப்புகள் நடைபெற்றன. இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலைப் பெறும் பஸிலின் முயற்சி தோல்வியில் முடிந்தது. அதேபோல் அடுத்த தேர்தல்களைக் கூட்டணியாக எதிர்கொள்வது குறித்தும் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே முக்கியமான சில முடிவுகளை எடுக்கும் நோக்கில் மூன்றாம் கட்ட சந்திப்பு இடம்பெறுகின்றது.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து 3 நாள் சபையில் விவாதம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விவாதத்தை நாளை முதல் மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளது என்று பிரதிப் பொதுச் செயலாளரின் பிரதானி சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

இதன்படி, நாளை புதன்கிழமை (24), வியாழன் (25) மற்றும் வெள்ளிக்கிழமை (26) ஆகிய நாட்களில் விவாதம் நடைபெறவுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலம் (இரண்டாம் வாசிப்பு) மற்றும் நச்சு, அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழான விடயங்கள் நாளை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை விவாதிக்கப்பட்ட பின்னர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விவாதம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி வழங்கப்பட்டாலும் ஏற்கத் தயாரில்லை

## பொன்சேகா எம்.பி. திட்டவட்டம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி தன்னிடம் வழங்கப்பட்டாலும் அதனைப் பொறுப்பேற்பதற்குத் தயாரில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக மோதல் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சந்திரிகா அம்மையார் நீண்ட காலம் அரசியல் செய்தவர். எனவே, சுதந்திரக் கட்சியில் அவர் போஷகர் என்ற பதவி நிலையில் இருக்க வேண்டும். அந்தப் பதவியில் இருந்து தேவையான ஆலோசனைகளை வழங்கலாம்.

மைத்திரிபால சிறிசேன பற்றி என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம். அவரைப் பற்றி கருத்து வெளியிட்டு எனது நேரத்தை வீணடிக்கத் தயாரில்லை.

அதேவேளை, மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் செல்வதற்கு நான் தயாரில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் களனி அமைப்பாளர் என்ற வகையில் அந்தக் கட்சியின் மே தினக் கூட்டத்திலேயே பங்கேற்பேன்." – என்றார்.





# புத்தளத்தில் உப்பு உற்பத்தியாளர்களின் காணியை ஆக்கிரமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்







(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் உப்பு உற்பத்தியாளர்களுக்கு சொந்தமான காணியை ஆக்கிரமிக்க சிலர் எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகக் குறிப்பிட்டு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை காலை உப்பு உற்பத்தியாளர் நலன் புரி சங்கத்தின் தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான பீ.எம்.ரனீஸ் பதூர்தீன் தலைமையில் புத்தளம் மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம்.இல்யாஸ் மற்றும் உப்பு உற்பத்தியாளர் நலன் புரிச்சங்க அங்கத்தவர்கள், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# சஜித் பிரேமதாஸவுடனான விவாதத்திற்கு தன் திகதிகளை வழங்கினார் அநுர குமார



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையில் நடைபெறவுள்ள விவாதத்திற்கான திகதிகளை தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிற்கு தேசிய மக்கள் சக்தி கடிதமொன்றை அனுப்பியது.

அதற்கமைய மே மாதம் 7, 9, 13 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

திகதியைத் தெரிவு செய்ததன் பின்னர் நேரம், விவாதத்திற்கான காலப்பகுதி, இடம் மற்றும் விவாதம் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி என்பன தொடர்பில் தீர்மானிக்க முடியும் என தேசிய மக்கள் சக்தி அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் ஒரு வகையில் விவாதத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி இணங்கவில்லையாயின் அது தொடர்பில் உடனடியாக அறிவிக்குமாறு அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவாதத்திற்கான திகதி இதுவரையில் நிர்ணயிக்கப்படாமையின் காரணமாக மக்கள் மத்தியில் தவறான கருத்துகள் பரவுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றார் ஜனாதிபதி






ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மல்வத்து மற்றும் அஸ்கிரி பீடங்களின் மகா நாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

முதலில் மல்வத்து மகா விகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து பீட மகா நாயக்க வண. திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல மகா நாயக்க தேரரை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்ட பின்னர் சிறு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பில் மல்வத்து பீட அனுநாயக்க வண. திம்புல்கும்புரே விமலதம்ம தேரரரும் கலந்து கொண்டமையுடன் அவர் ஜனாதிபதிக்கு பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தார்.

அதன் பின்னர் அஸ்கிரிய மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அஸ்கிரி பீட மகா நாயக்க வரகாகொட ஸ்ரீஞானரதன தேரரை சந்தித்து சிறிது நேரம் கலந்துரையாடினார்.

மதியங்கனை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண, முருந்தெணியே தம்மரதன தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு பிரித் பாராயணம் செய்து ஆசி வழங்கினார்கள்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்புகளில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோனும் கலந்து கொண்டார்.

# பேசாலையில் பட்டப்பகலில் அரச ஊழியரின் வீட்டில் சூறை

## பல லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் அபேஸ்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பேசாலை பொலிஸ் நிலையப் பிரிவில் பட்டப்பகலில் வீட்டுக்குள் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் சூறையாடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுத் திங்கள் கிழமை காலை பத்து மணிக்குப் பிற்பாடு பேசாலை பகுதியிலுள்ள அரச ஊழியர்களின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறையீடு செய்யப்பட்டத்திலிருந்து தெரிய வருபவை வருமாறு:–

சம்பவம் அன்று மாவட்ட செயலகத்தில் கடமைபுரியும் இவ்வீட்டுக்காரரின் மனைவி வழமைபோன்று காலையில் தனது கடமைக்காக அலுவலகம் சென்ற பின், பிரபல பாடசாலையில் பிரதி அதிபராக கடமைபுரியும் கணவன் பாடசாலை விடுமுறையாக இருந்தபோதும் தனது பிள்ளைகளை உறவினர் வீட்டில் விட்டுவிட்டு வேறு அலுவலுக்காக வெளியில் சென்றுள்ளார்.

பிற்பகல் ஆசிரியரான கணவர் வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது வீட்டுக் கதவு உடைபட்டு இருந்ததைக் கண்டுள்ளார்.

இதன்போது வீட்டில் வைக்கப்பட்டிருந்த மனைவியின் தாலிக்கொடி உட்பட பதின்மூன்று அரைப் பவுண் நகைகளும் ஐம்பதாயிரம் ரூபா பணமும் களவாடிச் செல்லப்பட்டதாக பொலிஸில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருடனை கண்டு பிடிக்கும் நோக்குடன் பொலிஸ் மோப்ப நாய் கொண்டு வரப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளது.

இது வரைக்கும் சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படாத போதும் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

அன்மைக்காலமாக பேசாலை பொலிஸ் பிரிவில் பட்டப் பகலில் அரச ஊழியர்களின் வீடுகள் கன்னமிடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வைத்தியசாலையில் கர்பிணித் தாய் விழுந்து சாவு!

## வயிற்றிலிருந்த குழந்தையும் பலி

(கே.வசந்தன்)

வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்பிணித் தாய் குளியலறையில் தவறி வீழ்ந்து சாவடைந்ததுடன் அவரது, வயிற்றில் இருந்த சிசுவும் மரணமடைந்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

மதவாச்சிப் பகுதியை சேர்ந்த நிறைமாத கர்பிணித்தாய் ஒருவர் வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்றை தினம் விடுதியில் உள்ள குளியலறைக்குச் சென்ற நிலையில் தவறி வீழ்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் மீட்கப்பட்டு அவரது வயிற்றில் உள்ள குழந்தையை காப்பாற்றுவதற்கான சத்திரசிகிச்சையினை வைத்தியர்கள் மேற்கொண்டுள்ளனர். எனினும் வயிற்றில் இருந்த சிசுவும் உயிரிழந்துள்ளது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# விஜயதாஸ ராஜபக்ஷவின் தெரிவு குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் தெரிவு மற்றும் நிறைவேற்றுக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று குழுக் கூட்டம் நேற்று முன்தினம் எத்துல்கோட்டே பகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றில் இடம்பெற்றது.

அந்த செயற்குழு கூட்டத்தின் போது, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.



# மார்ச் மாதத்தில் பணவீக்கம் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த மார்ச் மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த பெப்பரவரி மாதத்தில் 5.1 சதவீதமாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் மார்ச் மாதத்தில் 2.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் 5.1 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம், மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

எவ்வாறாயினும், உணவு பணவீக்கம் தொடர்ந்தும் 5 சதவீதமாக காணப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காட்டியிருந்தேன். அதுவே நடந்து விட்டது.

ஆக, நாளை கட்சியின் வழக்குத் தவணைக்கு முன்னர் மத்திய குழு வழக்குக் குறித்து கூடி முடிவெடுத்து அறிவிக்கும் வாய்ப்பு இனி இல்லை.

இப்படி 'குறூப் அப்செண்ட்' திட்டம் மூலம் கூட்டத்தை நடக்காமல் செய்யும் நகர்வின் பின்னணி என்னவென்று தெரியவில்லை என நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன். சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தகவல்களை திரட்டியதில் இருந்து, பின்னணியைக் கோர்த்துக் கட்டி, ஓரளவு ஊகிக்க முடிந்திருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு குழம்பி, விவகாரம் வழக்குக்குள் போன பின்னர் கட்சியின் மத்திய குழு கூடவில்லை.

ஆக, கடந்த மார்ச் 17ஆம் திகதி வவுனியாவில் கட்சியின் அரசியல் குழு மட்டுமே கூடியது. அங்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே – அந்த வழிகாட்டுதல் படியேயே – தாம் எதிராளியாக வழக்கை முன்னெடுக்கின்றார் என்று வழக்கின் ஓர் எதிராளியான சுமந்திரன் நீதிமன்றத்தில் கடந்த தவணையின் போது தெரிவித்திருந்தார். அரசியல் குழுவின் வழிகாட்டலின் அடிப்படையில் தமது ஆட்சேபனைகளையும் நீதிமன்றத்தில் அவர் எழுத்தில் சமர்ப்பணம் செய்தும் விட்டார்.

அரசியல் குழுவின் முடிவின்படிதான் அவ்வளவும் தான் செய்கின்றார் என்ற சுமந்திரனின் நிலைப்பாட்டை மற்றைய எதிராளிகள் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தவில்லை. ஏற்றுப் போகும் நிலையையே அங்கு பிரதிபலித்துள்ளனர்.

இப்போது சிறிதரன், யோகேஸ்வரன் உட்பட்ட ஏனைய எதிராளிகள் தங்கள் ஆட்சேபனைகளை நாளை தாக்கல் செய்ய வேண்டும்.

சுமந்திரன் எடுத்துள்ள 'லைனில்' தாங்களும் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்தால் சுமந்திரனின் நிலைப்பாட்டை ஏற்றதாகிவிடும்.

தப்பித் தவறி நாளை வழக்கு தவணைக்கு முன்னர் திட்டமிட்டபடி இன்றைய தினம் மத்திய குழு கூடி, ஏற்கனவே மார்ச் 17ஆம் திகதி அரசியல் குழு எடுத்த தீர்மானத்தை ஏற்று அங்கீகரித்து விட்டால் (கூட்டம் இன்று நடந்திருந்தால் பெரும்பாலும் அதுதான் நடந்திருக்கும் என்பது என் கணிப்பு), அதன் பின்னர் சுமந்திரன் வழியில் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயம் மற்றைய தரப்புக்கு ஏற்பட்டு விடும்.

இப்போது மத்திய குழு கூட்டம் நடக்கவில்லை. மத்திய குழு ஒரு முடிவையும் எடுக்கவில்லை.

'சுமந்திரன்கூறுவது அரசியல்குழுவின் வழிகாட்டல். அதை அவர் விரும்பினால் பின்பற்றலாம். ஆனால் கட்சியின் மத்திய குழுவே கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை எடுக்கக் கூடிய அதிகாரம் கொண்டது. அரசியல் குழுவின் முடிவு எங்களைக் கட்டுப்படுத்தாது. எதிராளிகளில் ஒருவர் அரசியல் குழுவிலேயே இல்லை. அரசியல் குழுவின் முடிவு கட்சியின் இறுதி முடிவு அல்ல. வழக்கின் எதிராளிகள் என்ற முறையில் நாங்கள் சுதந்திரமாக – சுயேச்சையாக – இப்போது எங்களது ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்திருக்கிறோம். காலக்கிரமத்தில் கட்சியின் மத்திய குழு கூடும்போது அது எங்கள் முடிவை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்' – என்று நீதிமன்றத்தில் தெரிவிக்க முடியும்.

இதன் மூலம் அரசியல் குழுத் தீர்மானங்களைக் காட்டி சுமந்திரன் போட்ட பூட்டை உடைக்கவும், சுமந்திரனுக்கு மாறான நிலைப்பாட்டை கட்சியின் நிலைப்பாடு போல காட்டி நீதிமன்றத்தில் எடுக்கவும் மற்றைய எதிராளிகளுக்கு வழி பிறந்திருக்கின்றது எனக் கருதுகின்றது சுமந்திரனின் எதிரணி.

இதுதான் அவர்களின் நிலைப்பாடு என்பது நாளை நீதிமன்றத்தில் உறுதியானால், வழக்கு விடயத்திலிருந்து தமிழரசு இப்போதைக்கு வெளியில் வராது என்று அறுதியிட்டுக் கூறலாம் என்பது தான் என் கணிப்பீடு.

கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி, காத்திரமாகப் பேசி, ஒரு தீர்மானத்தை எடுத்து, வழிநடத்த வேண்டியவர்கள், விடயங்களை கையாள முடியாமல் பேதமை நிலையில், முன்னுக்குப் பின் முரணாகத் தத்தளித்துப் பேசி, குழம்பிப் பேதலித்துக் கிடப்பதால் இப்படித்தான் கட்சி இழுபட்ட பக்கம் எல்லாம் எடுபட்டு, நொந்து நூலாவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

வீடு முடங்கினால் மானில் பறக்கலாம் என்பதற்கான நகர்வுகளும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் உண்டு. அது குறித்து பிறிதொரு நாள் பார்ப்போம்.

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஆனமடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஆனமடு பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## முடியாட்சி தருவதாகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபஞ்சம்தகவல்தொழிநுட்பவேலைத் திட்டத்தின் கீழ், 161 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், அம்பாந்தோட்டை, முல்கிரிகல, வீரகெட்டிய மீகஸ்ஆர மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது நாட்டு அரசியலில் நாய்ச் சண்டை போல் அதிகாரத்தைக் கைப்பற்ற சதிகள் நடந்து வருகின்றன. இந்தச் சதிகளை மேற்கொள்ளும் பேராசை நாட்டின் கல்வியை கட்டியெழுப்ப வேண்டும் என்ற விடயத்தில் அற்பேனும் இல்லை. இவையனைத்தும் அதிகாரம் மற்றும் பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் ஆசையால் மேற்கொள்ளப்படுகின்றன.

திருடர்களுடன் சேர்ந்து ஜனாதிபதி பதவியில் நானும் அமர்ந்திருந்தால் திருடர்களைப் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். நான் அவ்வாறு திருடர்களின் தயவில் பதவிகளை ஏற்காததால், திருடர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை இல்லை. தங்கள் நெருங்கிய நண்பர்களைப் பாதுகாத்து வருவதே இன்றும் கூட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மைகள் வெளிவராமைக்கான காரணமாகும்.

இது குறித்து பேராயர் கூட கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறான வன்முறைச் செயலையும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களையும் தூசிக்கும் மதிப்பில்லாமல், மறந்து செயற்பட்டு வருகின்றனர்.

தற்போதைய ஆட்சியாளர் திருடர்களுடனும் நெருங்கிய நண்பர்களுடனும், சக கூட்டாளி அரசியல்வாதிகளுடன் நட்புறவு வைத்திருந்தாலும், நாட்டின் 220 இலட்சம் மக்களுடனே நான் நட்புறவு வைத்திருக்கின்றேன்." – என்றார்.

## சு.கவைக் கைப்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் அரசோடு இணைந்து நிற்பதன் காரணமாக அவர்கள் மூவரையும் சு.கவில் வகித்த பதவிகளில் இருந்து மைத்திரிபால சிறிசேன நீக்கினார்.

இதற்கு எதிராக அவர்கள் நீதிமன்றம் சென்றனர். மைத்திரிபால கட்சியின் தலைவராக பதவி வகிப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. அவர்கள் மூவரும் சந்திரிகாவின் விசுவாசிகள். சந்திரிக்காவே கட்சியின் தலைவராக வர வேண்டும் என்று அவர்கள் பாடுபடுகின்றார்கள்.

அதேபோல், சு.கவின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து மைத்திரியால் நீக்கப்பட்ட தயாசிறி தயசேகர இந்தச் சந்தர்ப்பதைப் பயன்படுத்தி கட்சிக்குள் இருக்கும் அவரது விசுவாசிகளுடன் இணைந்துகொண்டு கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று அறியமுடிகின்றது.

அதேபோல், நீதிமன்றத் தடை நீங்கியதும் மைத்திரியே மீண்டும் தலைவராக வருவார். அந்தத் தலைவர் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மைத்திரி தரப்பு வியூகம் வகுத்து வருவதையும் அறியமுடிகின்றது.

இவ்வாறு மூன்று தரப்பினர் சு.கவைக் கைப்பற்றுவதற்குக் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமையைக் காண முடிகின்றது.

நீதிமன்றத் தடை அமுலில் இருப்பதால் மேற்படி மூன்று தரப்புக்களில் சந்திரிகா அணி, சு.கவின் பதில் தலைவராக நிமல் சிறிபால டி சில்வாவை நியமித்துள்ளது. அதேவேளை, மைத்திரி அணி, சு.கவின் பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷவை நியமித்துள்ளது. பதில் தலைவர் நியமனங்களால் சு.க. பிளவு அணிகளுக்குள் முரண்பாடு வலுத்துள்ளது. **(மேலதிக படங்கள் 7ஆம் பக்கத்தில்...)**



## ஈழ அகதிகள் மூவர்...

(முதலாம் பக்கத் தொடரட

தீடையில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று அப்பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

தற்போது நிலவும் அதிகரித்த வெப்பம் காரணமாக சுட்டெரிக்கும் வெய்யிலின் வெப்பத்தில் சூடுதாங்க முடியாமல் ஐந்தாம் மணல் தீடையில் தவித்த இலங்கை அகதிகளைத் தமிழகப் பொலிஸார் மீட்க நடவடிக்கை எடுத்து கடலுக்குச் சென்று பாதுகாப்பாக மீட்டுக் கரை சேர்த்துள்ளனர்.

இவ்வாறு சென்ற குடும்பத்தினர் விசாரணைகளின் பின்னர் மண்டபம் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப் படவுள்ளனர்.

# முடியாட்சி தருவதாகக் கூறினாலும் திருடர்களுடன் டீல் போட மாட்டேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சத்தியம்



















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் ஊடக அடக்குமுறை?

ஜனநாயக நாட்டின் முக்கிய மூன்று தூண்கள் - நிறைவேற்றதிகாரம், சட்டம் இயற்றும் அமைப்புகள், மற்றும் நீதி நிர்வாகம் என்பன என்பது நம் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

இவை ஒவ்வொன்றும், ஒன்றில் ஒன்று தங்காமலும், தலையிடாமலும், சுயாதீனமாகவும், தனித்துவமாகவும், நியாயமாகவும் செயற்பட்டால்தான் ஜனநாயகம் செழித்தோங்கும்.

இந்த மூன்று துறைகளினதும் சுயாதீன செயற்பாட்டிற்கான 'காவல் நாய்' ஊடகமாகும். அதனால்தான் அது ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் நான்காவது தூணாக மதிக்கப்படுகின்றது.

அராஜக ஆட்சியில் முதலில் நசுக்கப்படுவது உண்மை. உண்மையின் உயிர்ப்பை அடக்குவது என்பது ஊடக சுதந்திரத்தின் குரல்வளையை நசுக்குவதில் இருந்துதான் ஆரம்பிக்கும்.

ஊடகம் சுதந்திரமாகவும், ஜனநாயகமாகவும் செயற்படுவதற்கான இடைவெளி இல்லாத தேசம் ஜனநாயக நாடாகாது. அங்கு நடப்பது அடக்குமுறை ஆட்சியாகவும், எதேச்சாதிகாரத்தின் காட்டுத் தர்பாராகவும் இருக்கும்.

இந்த வகையில் நாட்டின் ஜனநாயகத்தின் காவலர்களான ஊடகத்துறையை நசுக்கி, அடக்கி, அடிபணிய வைக்கும் எதேச்சாதிகாரம் எப்போதுமே அதிகார வர்க்கத்திடம் இருந்து கட்டவிழ்ந்து கொண்டிருப்பது கண்கூடு.

நாட்டின் ஒன்பது மாகாணங்களின நிர்வாகங்களும் இப்போது நேரடியாக நிறைவேற்றதிகாரத்தின் கீழ். ஜனாதிபதியின் நேரடியான பிரதிநிதிகளாக ஆளுநர்கள் இப்போது அவற்றை நிர்வகிக்கின்றனர்.

மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகளின் உறுப்பினர்களும் அவர்களின் முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களும் ஆற்ற வேண்டிய கடமைகளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலையில் அவற்றை ஆளுநர்கள் ஆற்றுகின்றார்.

மக்கள் பிரதிநிதிகள் ஆற்ற வேண்டிய பொறுப்பையும் கடமையையும் ஆளுநர்கள் ஆகிய தாங்கள் ஆற்றும் போது அவர்கள் அது குறித்து பொறுப்புடனும், கவனத்துடனும், சட்டம் தங்களுக்கு அளித்துள்ள அதிகாரத்தில் எல்லை மீறாமலும் நடந்து கொள்வது கட்டாயமாகும். அந்தப் பொறுப்பில் இருந்து எந்த ஆளுநரும் தப்பிக்கக் கூடாது. தப்பிக்க முடியாது.

மக்கள் பிரதிநிதிகள் ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள் ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற முறையில் தாங்கள் ஆற்றி வருகின்றனர் என்பதையும் ஆளுநர்கள் மறந்து விடக்கூடாது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'வலம்புரி' நாளிதழ் ஆசிரியர் வடக்கு ஆளுநர் குறித்து அவருக்கு ஒரு திறந்த மடல் என்ற பெயரில் கடந்த மார்ச் 18 ஆம் திகதி வரைந்த ஆசிரியர் தலையங்கக் கருத்துக்காக யாழ். பொலிஸஸூக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு பத்திரிகை ஆசிரியருக்குரிய பொறுப்பு - கட்டுப்பாடு - உரிமை - உரித்து - சட்டம் வழங்கிய வரையறை - ஆகியவற்றுக்கு உள்ளே நின்றுதான் அந்த ஆசிரிய தலையங்கம் வரையப்பட்டிருக்கின்றது. எந்தச் சட்ட மீறலுக்கும், பொலிஸ் தலையீட்டுக்கும் அதில் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.

அதற்காக எந்த விசாரணையை முன்னெடுப்பதற்கும் பொலிஸாருக்கு சட்ட அதிகாரமும் இல்லை, தலையீடு செய்வதற்கு இடமும் இல்லை. எந்த குற்ற மீறலுக்காக ஆசிரியர் அழைக்கப்படுகின்றார் என்று கூறாமலேயே அவரைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பித்து, வாக்குமூலம் பெற்றமை பொலிஸாரின் அராஜகமும், அத்துமீறலும், ஊடக அடக்கு முறையும் ஆகும்.

ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்கான குற்றவியல் பொறுப்புக்கூறல் சட்டத்தை 2002 இல் இருந்த ரணிலின் அரசு விலக்கிக் கொண்டு விட்டது. ஊடக சுதந்திரம் அதன் மூலம் ஓரளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டது.

அப்படி இருக்க ஆளுநர் அல்லது அவரது பிரதிநிதி முறைப்பாடு செய்தார் என்ற பெயரில் ஊடகங்களை - அவற்றின் ஆசிரியர்களை - சட்டத்தில் இல்லாத அதிகாரங்களைப் பிரயோகித்துக் கையாள்வதும் பொலிஸ் நிலையத்துக்கு அழைப்பதும் பெரும் அச்சுறுத்தல் நடவடிக்கையாகும்.

இதற்கு எதிராக முதலில் பொலிஸ் ஆணைக்குழுவிலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்விடயத்தில் பொலிஸாரினதும், அதிகார தரப்பினரதும் அடாவடித்தனச் செயற்பாட்டை - ஊடகங்கள் மீதான சட்ட விரோத - அழுத்தத்தை பார்த்திருந்தால் இந்த நாட்டில் மீண்டும் ஓர் இருண்ட யுகத்தை ஊடகத்துறை சந்திக்க வேண்டிய அவலமே நேரும். மிஞ்சும்.

பொலிஸாரின் இத்தகைய அத்துமீல்களுக்கு வழி செய்த - அல்லது தூண்டிய - வடக்கு ஆளுநர் இவ்விடயம் தொடர்பில் தமது பக்கத்தில் ஏதும் நியாயம் இருந்தால் அதைப் பகிரங்கமாக மக்கள் முன் வைக்க வேண்டும்.

அதுவரையில் பொலிஸாரை ஏவி, ஊடக அடக்கு முறையை அவரும் சேர்ந்தே வழிப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு விரல் அவரை நோக்கி நீண்டே இருக்கும்.

# வெறுப்பும் பாகுபாடும்தான் மோடியின் அசல் உத்தரவாதம்

## ராஜஸ்தான் பேச்சுக்கு ஸ்டாலின் கண்டனம்





"பிரதமர் நரேந்திர மோடியின் நச்சுப் பேச்சு இழிவானது. தனது தோல்விகளுக்கு எதிரான மக்களின் கோபத்துக்கு அஞ்சி, மத உணர்ச்சிகளைத் தூண்டி, வெறுப்புப் பேச்சின் மூலம் தாம் எதிர்கொண்டுள்ள தோல்வியைத் தவிர்க்கப் பார்க்கிறார் மோடி. வெறுப்பும் பாகுபாடும்தான் மோடியின் அசலான உத்தரவாதங்கள்."

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"பிரதமர் நரேந்திர மோடியின் நச்சுப் பேச்சு இழிவானதும், மிகவும் வருத்தத்துக்குரியதும் ஆகும். தனது தோல்விகளுக்கு எதிரான மக்களின் கோபத்துக்கு அஞ்சி, மத உணர்ச்சிகளைத் தூண்டி, வெறுப்புப் பேச்சின் மூலம் தாம் எதிர்கொண்டுள்ள தோல்வியைத் தவிர்க்கப் பார்க்கிறார் மோடி. வெறுப்பும் பாகுபாடும்தான் மோடியின் அசலான உத்தரவாதங்கள். அவரது இத்தகைய அப்பட்டமான வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சைக் காதில் வாங்காதது போல் இருக்கும் தேர்தல் ஆணையம் நடுநிலைமை என்பதன் சுவடே இன்றி அப்பண்பையே கைவிட்டுள்ளது.

இண்டியா கூட்டணி வாக்குறுதியளித்துள்ள சமூக – பொருளாதார மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குவதற்கான வழிமுறையாக நெடுநாள்களாக வலியுறுத்தப்பட்டு வந்ததாகும். அதற்குத் தவறான பொருள் கற்பித்து, பின்தங்கிய வகுப்பினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் ஆகியவற்றில் உரிய பங்கு கிடைக்கவிடாமல் செய்கிறார் பிரதமர் மோடி.

இண்டியா கூட்டணியின் தலைவர்கள் பா.ஜ.கவின் வஞ்சகமான திசைதிருப்பும் தந்திரங்களைப் பற்றி கவனமாக இருக்கவேண்டும். மோடியின் மோசமான தோல்விகளை அம்பலப்படுத்தும் நமது முயற்சிகளை மேலும் உறுதியுடன் மேற்கொள்ள வேண்டும்." என்று பதிவிட்டுள்ளார்.

இதனிடையே, 'மோடியின் வெறுப்புப் பேச்சு மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மக்களவை இரண்டாம் கட்டத் தேர்தல் வாக்குப்பதிவு எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், மோடியின் ராஜஸ்தான் பேச்சு, பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் பன்ஸ்வாடா எனும் இடத்தில் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய மோடி,

"மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது இந்த நாட்டின் சொத்துகளில் முதன்மை உரிமை முஸ்லிம்களுக்குத்தான் உள்ளது என்று கூறினார். இதன் பொருள் என்ன? அவர்கள் (காங்கிரஸ்) யாருக்கு சொத்துகளை பிரித்துக் கொடுப்பார்கள்? யார் அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ, யார் இந்த நாட்டின் மீது படையெடுத்து ஆக்கிரமித்தார்களோ அவர்களுக்கு சொத்துகளை பிரித்துக் கொடுப்பார்கள். நீங்கள் கடினமாக உழைத்து ஈட்டிய பணத்தையெல்லாம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தருவதை ஏற்றுக் கொள்கிறீர்களா? வேடிக்கை பார்க்கப் போகிறீர்களா?" என்று மிகவும் ஆவேசத்துடன் பேசியிருந்தார்.

# தி.மு.கவின் ஆட்சியில் பொலிஸ் காவலில் அதிகளவானோர் உயிரிழப்பு; பழனிசாமி



தி.மு.க. ஆட்சியில் பொலிஸ் காவலில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன், இத்தகைய மரணங்களைத் தடுக்க, இதுவரை எந்த நடவடிக்கையும் தி.மு.க அரசு எடுக்கவில்லை என்றும் எடப்பாடி குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் பொதுமக்களிடமும், விசாரணைக் கைதிகளிடமும் சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு மட்டுமே நடந்து கொள்ள வேண்டும் என பொலிஸாருக்கு உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் தமிழக அரசுக்கு எடப்பாடி வலியுறுத்தியுள்ளார்.

# இந்தோனேசிய ஜாவா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் உள்ள ஜாவா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக ஜேர்மன் புவி அறிவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது நேற்று மதியம் அந்த நாட்டு நேரப்படி 12.48 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.0 ஆக பதிவானதாக ஜெர்மன் புவி அறிவியல் ஆய்வு மையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

7.94 டிகிரி தெற்கு அட்சரேகையிலும், 109.32 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் 97.8 கி.மீ. ஆழத்திலும் பதிவான இந்த நிலநடுக்கம் தொடர்பாக சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை என கூறப்படுகிறது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விபரங்கள் ஏதும் வெளியாகாத நிலையில், கடந்த 9 ஆம் திகதி மேற்கு பப்புவா மாகாணத்தில் 6.0 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நியூயோர்க் குற்றவியல் நீதிமன்றத்தில் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலையானார்





அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நியூயோர்க்கில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்கு முன்னிலையாகியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

2016 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னதாக நடிகையான ஸ்டோர்மி டேனியல்ஸுக்கு 130,000 டொலர் பணம் செலுத்தியதை மறைக்க முற்பட்டார் என டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வணிகப் பதிவுகளை திரிபுப்படுத்தியமை உள்ளிட்ட தம்மீதான 34 குற்றச்சாட்டுக்களை டொனால்ட் ட்ரம்ப் மறுத்துவருகிறார்.

அத்துடன், நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியொருவர் குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் குங்டோங் மாகாணத்தில் பலத்த மழையால் வெள்ளம் பாதிப்பு



சீனாவில் அதிக சனத்தொகையை கொண்ட குங்டோங் மாகாணத்தில் பெய்து வரும் பலத்த மழையினால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அப்பகுதியிலிருந்து சுமார் 60 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கி மூவர் உயிரிழந்துள்ளனர். 11 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் தொடர்ந்தும் உயர்வடைவதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# கந்தளாய் விபத்தில் யுவதி ஒருவர் மரணம்

கந்தளாய் – ரஜ எல பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை, இந்தப் பகுதியில் பயணித்த வான், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, யுவதி மீது மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

கந்தளாய் – ரஜ எல பிரதேசத்தில் வசித்து வந்த 19 வயதுடைய யுவதியே விபத்தில் மரணித்தவராவார்.

விபத்தின் பின்னர் சாரதி தப்பிச் சென்றுள்ளார். சந்தேக நபரைக்கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கந்தளாய்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 5 அரச நிறுவனங்களின் தலைவர்கள் கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டனர்

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் உள்ளிட்ட 5 அரச நிறுவனங்களின் தலைவர்கள் இந்த வாரம் கோப் எனப்படும் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மஹாபொல உயர் கல்வி உதவித்தொகை நிதியம் ஆகிய நிறுவனங்களின் தலைவர்களே மேற்படி குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதற்கமைய. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நாளையும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மஹாபொல உயர் கல்வி உதவித் தொகை நிதியம் ஆகியவற்றின் தலைவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதியும், ஸ்ரீ லங்கன் விமானச் சேவை நிறுவனத்தின் தலைவர் எதிர்வரும் 26ஆம் திகதியும் கோப் எனப்படும் என அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# வரி ஏய்ப்பு மூலம் நாட்டில் பதிவு செய்த 112 வாகனங்களைக் கைமாற்றத் தடை

## கொழும்பு பிரதான நீதிவான் நேற்று உத்தரவு

இலங்கையில் வரி ஏய்ப்புச் செய்து மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களை விற்பனை செய்வதற்கும் கைமாற்றுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று இந்தத் தடையை விதித்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணையொன்றின் பிரகாரம், இலங்கையில் சுமார் 112 வாகனங்கள் வரி ஏய்ப்புச் செய்து மோசடியான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

இந்த வாகனங்கள் உரிய முறையில் சுங்கத் திணைக்களத்தில் இருந்து விடுவிக்கப்படாமல் போலியான ஆவணங்கள் மூலம் விடுவிக்கப்பட்டு, பெறுமதி குறைந்த வாகனங்களின் பதிவெண்களைக் கொண்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் மோசடியான முறையில் பதிவு செய்யப் பட்டுள்ளன என அந்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இதன் பிரகாரம், இந்த வாகனங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை அவற்றை வேறு நபர்களுக்குக் கைமாற்றவோ, விற் பனை செய்யவோ தடை விதித்து நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# 'யுக்திய' சுற்றிவளைப்பு என்ற போர்வையில் நுரைச்சோலை நாவக்காட்டில் கொள்ளை!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

நுரைச்சோலை நாவற்காடு பகுதியில் நேற்று முன்தினம் போலி பொலிஸ் குழுவொன்று வீடொன்றிற்குள் புகுந்து, வீட்டில் உள்ளவர்களை அறையில் அடைத்து வைத்துவிட்டு,

தங்க ஆபரணங்கள், கையடக்க தொலைபேசி மற்றும் பணம் உள்ளிட்ட 90 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்களைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவற்காடு பகுதியில் புகையிலை மற்றும் மரக்கறி வர்த்தகரின் வீட்டிலேயே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளைச் சம்பவத்தின் போது வீட்டின் வர்த்தகர், அவரது மனைவி, தாய் மற்றும் வர்த்தகரின் மூன்று மகள்கள் வீட்டில் இருந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. பொலிஸாரின் சீருடைக்கு நிகரான சீருடையில் வந்துள்ள கொள்ளை கும்பல், 'யுக்திய' தேடுதல் நடவடிக்கை என்று கூறி கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர்களை இதுவரை பொலிஸாரால் அடையாளம் காண முடியவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.




# கெஹெலிய ரம்புக்வெலவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேர் மீளவும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள் நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, கெஹெலிய ரம்புக் வெல்ல உள்ளிட்ட 8 பேரை எதிர்வரும் 06 ஆம் திகதி வரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டுள்ளார்.

# வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் எல்லை கடந்து அதிகரிக்கும் லஞ்சம்!

**(வவுனியா நிருபர்)**

வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் ஒருநாள் கடவுச்சீட்டு பெறுவதற்கு வரிசையில் இலக்கம் பெறுவதில் இருந்து கடவுச்சீட்டு பெறும் வரையில் லஞ்சம் பெறப்படுவதாக பொதுமக்களால் குற்றம் சாட்டப்படுகின்றது.




வவுனியா குடியகல்வு, குடிவரவு திணைக்களத்தில் கடவுச்சீட்டு பெறுவதற்காக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மதவாச்சி போன்ற பிரதேசங்களில் இருந்து மக்கள் தினமும் அதிகளவில் வருகை தருகின்றனர்.

இந்நிலையில் ஒரு நாள் கடவுச்சீட்டு மற்றும் சாதாரண கடவுச்சீட்டைப் பெறுவதற்காக வரும் மக்கள் அதிகாலையிலேயே இரு வரிசைகளில் காத்திருக்க வேண்டும். காத்திருப்போருக்க காலை 6 மணியளவில் கடவுச்சீட்டு அலுவலகத்தால் இலக்கம் வழங்கப்பட்டு கடவுச்சீட்டு பெற வருவோர் உள்வாங்கப்படுவது வழங்கமாக உள்ளது.

இதன்போது வரிசையில் இரவு பகலாக பலரும் காத்திருக்கும் நிலையில் ரவுடிகள் போன்று செயற்படும் சிலர் ஒருவருக்கு தலா 5,000 ரூபாவுக்கும் அதிகமான பணத்தைப் பெற்று வரிசையில் காத்திருக்காமலேயே இலக்கங்களை வழங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு கடவுச்சீட்டு அலவலக காவலாளிகள் உட்பட அதிகாரிகள் வரை உடந்தையாக செயற்படுகின்றனர் எனவும் பொலிஸாரும் அவர்களுக்கு உடந்தையாக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அங்கு பணம் கொடுக்காமல் இரவு - பகலாக வரிசையில் நிற்பவர்கள் குறித்த தினத்தில் கடவுச்சீட்டைப்பெற முடியாமல் திரும்பி செல்லும் நிலை காணப்படுவதோடு குழப்ப நிலைமையும் ஏற்படுகின்றது.

இதற்குமப்பால் கடவுச்சீட்டு அலுவலகத்தினுள்ளும் அதிகளவான பணத்தினை வழங்கி மிக இலகுவாக கடவுச்சீட்டை பெற முடிவதாகவும் பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர்.

எனவே வரிசையில் காத்திருக்கும் பொதுமக்கள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்புகையில் பணம் வாங்கி வரிசையில் இலக்கத்தினை பெற்றுகொடுக்கும் கும்பல் தினமும் பொலிஸார் பாத்திருக்க அதிகளவில் பணத்தினை சம்பாதித்து செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.




## பிறப்புச் சான்றிதழ் இல்லாமையினால்

# அடையாள அட்டை பெறாதோருக்கு அதை வழங்கும் காலஎல்லை நீடிப்பு

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போன, 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக அடையாள அட்டையை வழங்குவதற்கான கால எல்லை எதிர்வரும் ஜுன் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாமையினால் இதுவரை அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள நபர்களுக்காக இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் கடந்த மார்ச் 31 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த கால எல்லையை நீடிக்குமாறு பிரதேச செயலாளர்கள் முன்வைத்த கோரிக்கையை கருத்திற்கொண்டு, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



# தியத்தலாவை ஓட்டப் பந்தய திடல் விபத்து; இரு வாகன சாரதிகளுக்கும் விளக்கமறியல்

தியத்தலாவை – நரியாகந்தை ஓட்டப் பந்தய திடலில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு வாகன சாரதிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இரண்டு பேரும் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன்போது அவர்கள் நேற்று காலை தியத்தலாவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை மற்றும் பேராதனை பகுதிகளைச் சேர்ந்த 36 மற்றும் 47 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விபத்து தொடர்பில் இராணுவத்தினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தியத்தலாவை – நரியாகந்தை ஓட்டப் பந்தய திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற Fox Hill Super Cross 2024 ஓட்டப் பந்தயத்தில் ஏற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

இதில் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 8 வயதுடைய சிவக்குமார் தனுசிகா என்ற சிறுமியும் அடங்குகின்றார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த விபத்தில் சிக்குண்ட 19 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலை ஈயில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களில், 11 பேர் தியத்தலாவை வைத்தியசாலையிலும் 7 பேர் பதுளை பொது வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், அவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நல்லெண்ணங்களோடு கடமைகளை செய்து வந்தால் புண்ணியமே சேரும்!

**(இன்று சித்திரா பௌர்ணமி)**

● ஆர்.நடராஜன் ஹரன்

சித்திரை மாதம் வரும் பௌர்ணமி சித்திரை நட்சத்திரத்தில் தோன்றுகிறது. இந்த நன்னாளில் சிவபெருமான் மற்றும் அம்பாள், முருகன் உள்ளிட்ட தெய்வங்களை வழிபடுவது சிறப்பு. இந்த ஆண்டு பௌர்ணமி திதி நேரம், ஏப்ரல் – 22 – திங்கட்கிழமை மாலை 05.55 மணி முதல் ஏப்ரல் – 23 – 2024 செவ்வாய்க்கிழமை இரவு 07.48 மணிவரை இருக்கிறது.

நம்முடைய பாவ புண்ணிய கணக்குகளை ஒன்றுவிடாமல் எழுதிவைத்து, நம்முடைய உயிர் பிரிந்ததும், நம் நரகத்துக்குச் செல்ல போகின்றோமா, சொர்க்கத்துக்குச் செல்ல போகின்றோமா என்பதை நிர்ணயிப்பது சித்திர குப்தனின் கையில் இருக்கும் கணக்கு புத்தகத்தில்தான் உள்ளது.

**சித்திரா பௌர்ணமியின் சிறப்பு**

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடி வரும் பௌர்ணமி நாள் சித்திரா பௌர்ணமி நாளாகும். இது வசந்தகாலம். காலங்களில் நான் வசந்த காலமாக இருக்கிறேன் என்று பகவான் கண்ணன் பகவத் கீதையில் கூறுகிறார். இந்த வசந்த காலத்தில்தான் பெரும்பாலும் ஆலயங்களில் பிரம்மோற்சவம் (திருவிழா) நடைபெறுகிறது.

அக்ஷய திருதியை போலவே இந்த நாளிலும் தானங்கள் செய்வது நன்மை தரும் என்று கருதப்படுகிறது.

வெய்யிலுக்கு இதமாகத் தயிர்சாதம், கைவிசிறி, பானகம், நீர்மோர் இவற்றை அந்தணர்களுக்குத் தானமாக அளிப்பது வழக்கம்.

எனினும் இன்றைய நாளில் உப்பில்லாமல் உணவருந்தி, பசும்பால், பசு நெய், பசுந்தயிர் தவிர்த்து சித்திரா பௌர்ணமி விரதம் இருந்து ஒரு நோட்டுப் புத்தகம், பேனா முதலியவையும் தானம் செய்யலாம்.

மாதம் தோறும் தான் பௌர்ணமி வருகிறது. சித்திரை மாதப் பௌர்ணமியில் அப்படி என்ன சிறப்பு?

அச்சுவினி முதல் ரேவதி வரையான இருபத்தேழு நட்சத்திரங்களில் பதின்நான்காவதாக வரும் சித்திரை நட்சத்திரம் அம்மனுக்கு உரிய சிறப்புத் தினமாக அமைகின்றது. மாதந்தோறும் வரும் இந்தச் சித்திரை நட்சத்திர தினங்களில் சித்திரை மாதம் பௌர்ணமி தினத்துடன் கூடிவரும் சித்திரை நட்சத்திர தினம் சித்திரா பௌர்ணமி என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

தாயாரை இழந்தவர்கள் இந்தத் தினத்தில் விரதமிருப்பதால் இந்த நாள் பிதிர்களுக்கு உரிய விரத நாளாகவும் அமைகின்றது.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசை தினத்தன்று விரதமிருப்பது போன்று தாயாரை இழந்தவர்கள் சித்திரா பௌர்ணமி தினத்தில் விரதம் மேற்கொள்வது விதியாக அமைந்துள்ளது.

சித்திரா பௌர்ணமி "சித்திரா குப்தம்....மஹா பிராஜ்னம்...லோககாகி....பத்ரதாரிணம்....சித்ர ரத்னாம்பர தாரம்!.மத்யஸ்தம்... ஸர்வதேஹினாம்..."

எந்தக் காரியாலயத்திலும் அல்லது கணக்கு சரி பார்க்க ஒரு ஆடிட்டர் தேவைப்படுகிறார். இவர் வரவு மற்றும் செலவு சரியாக இருக்கிறதா என்று பார்த்துச் சரியாக இல்லை என்றால் அதற்குத் தகுந்தால் போல் தண்டனையும் கிடைக்கிறது. அபராதமோ அல்லது கோர்ட்டுக்கோ போகவேண்டி இருக்கும்.

அதே போல இயம லோகத்துக்கும் ஒரு ஆடிட்டர்



தேவைதானே. எத்தனைக் கோடி மக்களுக்கு பாப புண்ணியக் கணக்கு எழுத வேண்டும்? அதற்குத் தகுந்தால் போல் வாழ்க்கையும் அமையும். இயமலோக ஆடிட்டர் சித்திர புத்திரன். இந்தச் சித்திர புத்திரன் பற்றி இரண்டு விதமான் புராணங்கள் இரண்டு விதமாகக் கூறுகின்றன.

உலகத்துக்கு எல்லாம் ஈசன் சிவபெருமான் ஒரு தடவை ஏடும் எழுத்தும் கொண்டு கணக்கு எழுத ஒரு தேவதையைப் படைக்க எண்ணினார். அதன்படி ஒரு சித்திரம் வரைந்து அதற்கு உயிரூட்ட ஒரு தேவதைத் தோன்றினாள். அவளிடமிருந்து ஒரு அழகான புத்திரன் வர சித்திரத்தில் இருந்து வந்ததால் சித்திரப் புத்திரன் என்று அழைக்கப்படலானான். இதே சித்திர புத்திரன் மீண்டும் ஒருமுறை சிவனருளால் காமதேனுவுக்குப் பிறந்து இதே பெயர் பெற்றார். இவனுக்கு எல்லோருடைய பாப புண்ணியக் கணக்குகளை எழுதும் வேலையைச் சிவபெருமான் கொடுக்க அதைப் பாரபட்சமில்லாமல் இவர் செய்து வருகிறார். குப்த் என்றால் ரகசியம் என்று பொருள்படும்.

நமது பாபபுண்ணியங்கள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவர் இயமதர்மராஜா முன்னிலையில் பூத உடலைவிட்டு வரும் மனிதர்களின் பாப புண்ணியங்களைத் தன் ஏட்டிலிருந்து ஒப்புவிக்கிறார். அதற்குத் தகுந்தால் போல் விளைவும் ஏற்படுகிறது. கேது கிரஹத்துக்குச் சித்திரபுத்திரன் அதிதேவதை.

இன்னொரு புராணம் – ஒருமுறை நீளாதேவி ஒரு அப்ஸரஸ் சூரியனின் அழகில் காதல் கொண்டு தன்னை இழந்தாள். அதனால் சூரியப்பிரகாசம் கொண்ட மிகுந்த அறிவாளியாக ஒரு குழந்தை சித்திரை மாதம் சித்திரா நட்சத்திரத்தில் பௌர்ணமி அன்று பிறந்தது. சிறந்த கல்விமானாக விளங்கி பிரும்மாவுக்குச் சிருஷ்டி வேலையில் உதவ ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாக தானே அந்த வேலையைச் செய்ய ஆரம்பித்தார். இதனால் தேவர்களுக்கு பயம் ஏற்பட்டு "எங்கே பிரம்மாவின் வேலையையும் இவர் முழுவதும் எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது? "என்று தயங்கி சூரியனிடம் முறையிட்டனர்.

சூரியன் தந்தை ஆதலால் சித்திர புத்திரனிடம் நயமாகப் பேசி இதைவிடச் சிறந்த வேலை மக்களின் பாப புண்ணியக் கணக்கு எழுதுவது என்றுச் சொல்லி அந்த வேலையைச் செய்யுமாறு கூறினார். அதை ஏற்றுக்கொண்டு சித்திரபுத்திரன் அந்த வேலையை இப்போதும் செய்து வருகிறார்.

**பூஜை செய்வது எப்படி**

சித்ரா பௌர்ணமியன்று வீட்டைச் சுத்தம் செய்து பூஜை அறையில் விநாயகர் படத்தை வைத்து அரிசி மாவால் சித்ரகுப்தன் படம் வரைந்து கையில் ஏடும், எழுத்தாணியும் வரைய வேண்டும். சித்ரகுப்தா என்று சொல்லிக் கொண்டு இருக்க வேண்டும். அன்று உப்பில்லாத உணவுகளையே (கனிகள்) உண்ண வேண்டும். மாலையில் பவுர்ணமி தினம் உதயமானதும் சித்ரகுப்தனுக்கு பூஜை செய்ய வேண்டும். தலை

தொடர்ச்சி▼

# நல்லெண்ணங்களோடு கடமைகளை செய்து வந்தால் புண்ணியமே சேரும்!

தொடர்ச்சி▲

வாழை இலையில் சர்க்கரை பொங்கல் அல்லது வெண் பொங்கலை படைக்க வேண்டும். பயிற்றம் பருப்பு, எருமைப் பாலும் சேர்த்து பாயசம் செய்து நிவேதனம் செய்யலாம். சித்ர குப்த விரத முறையில் மக்கள் உப்பு, பால், மற்றும் பால் சார்ந்த பொருள்களைத் தவிர்க்கின்றனர். காமதேனுவிடம் இருந்து சித்திரகுப்தன் தோன்றியதால் பால் மற்றும் பால் சார்ந்த பொருள்கள் தவிர்க்கப்படுகின்றன.

இந்த நாளில் விரதம் எடுத்து பூஜை செய்பவர் அதற்கென்று தனிக்கோலம் போட்டு, தெற்குப் பக்கம் மூடி உள்ளே சூரிய சந்திரரின் படம் வரைந்து, நடுவில் சித்திரபுத்திரனின் படம் வரைந்து, ஒரு கையில் எழுத் தாணியும் மற்றொரு கையில் ஏடும் வரைந்து வழிபடுவார்கள். உப்பு இல்லாத உண்வு உண்டு பின் ஒரு மாணவனுக்கு பள்ளி நோட்டு புத்தகமும் பேனாவும் தானம் செய்வார்கள்.

இந்தப் புராணங்களை ஒரு பக்கம் ஒதுக்கினாலும் 'நமக்கு மேலும் ஒருவனடா அவன் நாலும் தெரிந்த கலைஞனடா' என்றபடி நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் நன்மையோ தீமையோ விளைவுகள் உண்டு. இதைத்தான் 'விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமோ?' என்பார்கள் ஆகையால் எப்போதும் ஒரு விழிப்புணர்வோடு நல்லெண்ணங்களோடு அன்பு உள்ளத்துடன் கடமைகளைச் செய்து வந்தால் புண்ணியமே சேரும்.



# எலுமிச்சை விலை திடீர் அதிகரிப்பு!

ஒரு கிலோகிராம் எலுமிச்சைப் பழத்தின் விலை 1,200 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் எலுமிச்சைப் பழத்தின் விலை1,000 ரூபா முதல் 1,200 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், எலுமிச்சைப் பழத்தின் விலை, பாரிய அளவு குறைவடைந்திருந்ததாகவும் தற்போது அது சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் வறட்சியான வானிலையினால் எலுமிச்சைப் பழத்தின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் ஜனாதிபதி நாளை இலங்கைக்கு விஜயம்

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி நாளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஈரானின் 529 மில்லியன் டொலர் நிதியு தவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை பொது மக்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக அவர் இலங்கை வரவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் ஏற்பாடுகள், தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று உமா ஓயா மின் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, இலங்கைக்கான ஈரானிய தூதுவர், ஈரானிய ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் திட்ட நிர்மாண நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.



# விபுலானந்தர் துறவறம் பூண்டு இன்றுடன் 100 ஆண்டுகள்...!

## இன்று காரைதீவில் துறவற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பணம்!

"ஈழம் முதல் பனி இமயம்வரை கொடி கட்டும் இசைத்தமிழன்.." என்று புலவர் மணி பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளையால் புகழப்பட்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு (1924-2024) இன்று (23) ஆரம்பமாகின்றது.

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார். அவர் துறவறம் பூண்டு இன்றுடன் 100 ஆண்டுகள் ஆகின்றன.

1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் சுவாமிகள், தான் வாழ்ந்த 55 வருடத்துள் தனது 32 ஆவது வயதில் பண்டிதர் மயில்வாகனன் என்ற நாமத்திலிருந்து சுவாமி விபுலானந்தர் என்ற உலகப்புகழ் பெற்ற மந்திர சக்தியுடைய நாமத்தை தாங்குகிறார்.

சித்திரா பௌர்ணமி என்பது சித்திரை மாதம் பௌர்ணமி திதியில் சித்திரை நட்சத்திரமும் கூடி வருவதால் சித்திரா பௌர்ணமி என அழைக்கப் பெறுகின்றது. மாதத்தின் பெயரும் நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி சூரியன் உச்ச பலம் பெறும் மேட இராசியில் வரும் பௌர்ணமி தினம் சிறப்புப் பெறுகின்றது.

இந்தச் சித்திரா பௌர்ணமி விரத நாளில் இயமனின் சபையில் நம் பாவ புண்ணியக் கணக்கை இம்மியும் பிசகாமல் எழுதும் சித்திரகுப்தன் அவதரித்த நாளாகவும் இது கருதப்படுவதால் சித்திர புத்திரனார் விரதமும் அமைகின்றது.

சித்ரா பௌர்ணமி ஒரு தனிநபரின் நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்பர்.

அப்படிப்பட்ட உன்னதமான தினத்தில் சுவாமி காவியுடை தரித்து பெரும் துறவியானார்.

ராமகிருஷ்ண மடாலயத்தின் சுவாமி சர்வானந்தரின் இலங்கை விஜயம் மயில்வாகனன் வாழ்வில் மகத்தான மாற்றத்துக்கு வழி கோலியது.

அதுமட்டுமின்றி 1920-1922 களில் யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராக சேவையாற்றிய காலம். அங்கு அவருக்கு உற்ற நண்பராக விளங்கியவர் மு. திருவிளங்கம் என்பவராவார். திருவிளங்கம் எதிர்பாராத வகையில் காலமானார். இவரின் இழப்பு, மயில்வாகனனாரின் உள்ளத்தில் தீவிரமான துறவு நாட்டத்தை ஏற்படுத்தியது.

அவ்வேளையில் யோகர் சுவாமிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். உலகியலில் சலிப்புற்ற இவர் தமது பதவியைத் துறந்து 1922 இல் இராமகிருஷ்ண மடத்தில் இணைந்து கொண்டார். 1924 இல் சித்திராபௌர்ணமி தினத்தில் இராமகிருஷ்ண மடத்தின் தலைவராகவும், இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச் சீடர்களுள் ஒருவராக விளங்கிய சுவாமி சிவாநந்தரிடம் ஞானோபதேசம் பெற்று பிரபோத சைதன்யர் என்ற பிரம்மச்சரிய ஆச்சிரம நாமத்தை விட்டு சுவாமி விபுலாந்தர் என்னும் துறவறத் திருநாமத்தைச் பெற்றார்.

"ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப் பெற்ற பேருஞ் சதமல்ல
பெண்டீர் சதமல்ல" என்னும் வாக்குக்கு இணங்க துறவறமெய்தினார்.

கிழக்கின் காரைதீவு மண்ணில் 1982.03.27 ஆம் திகதி அவதரித்த சுவாமியின் வாழ்க்கையின் திருப்பு முனையான காலமாய் அமைந்தது துறவறத்தின் பின்னராகும்.



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டு 1924 – 2024

மயில்வாகனன் என்ற நாமத்துடன் லண்டன் பல்கலைக்கழக அறிவியல் பட்ட தாரியாய் , மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதராய் மேல்நாட்டு உடையுடன் கம்பீரமாக இருந்த கோலம் மாறி, காவி உடை தரித்து, தாமரை இலைமேல் நீர் போன்ற நிலைக்குள் வந்து துறவியாய் பிறப்பெடுத்த நாள் இன்றைய சித்திரா பௌர்ணமி தினம் எனலாம்.

"வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது" என்று சிந்திக்கும் நிலையை அடைந்த காலம்தான் துறவுக்காலம்.

இல்லறத்தில் இணைந்திருந்தால் காரைதீவின் மைந்தன் மயில்வாகனன் குடும்பஸ்தனாகி குழந்தைகளுடன் குடித்தனம் நடத்தி சாதாரண மானவராகவே மறைந்திருப்பார்.

ஆனால் உலகம் போற்றும் பெருமகனாராக விளங்க வைத்தது இந்தத் துறவுநிலை எனலாம்.

சுந்தரரை இல்லறத்தில் இணைய விடாமல் எம்பெருமான் தடுத் தாட் கொண்டார். அரச போகத்தில் இருந்த சித்தார்த்த கௌதமர் இல்லறத்தை ஒதுக்கி இறைஞானம் பெற்றார். அதே போன்ற ஒரு நிலைமையே மயில்வாகனுக்கும் கிடைத்தது எனலாம். எல்லாமே இறைசித்தம்.

விஞ்ஞானம் படித்தவர் மெஞ்ஞானத்துள் மூழ்குகிறார். தமிழை மூச்சாக்கி நிற்கின்றார். சமரச சன்மார்க்கத்தின் வழியில் பயணிக்கிறார். ஆனால் சைவத்தைக் கைகளில் ஏந்துகிறார். இவையெல்லாம் துறவால் விளைந்த விளைவுகள் என்றே எடுத்துக்

தொடர்ச்சி▼

# விபுலானந்தர் துறவறம் பூண்டு இன்றுடன் 100 ஆண்டுகள்...!

**தொடர்ச்சி▼**

கொள்ளல் வேண்டும்.

23 வருட துறவு வாழ்க்கை அவரை உலகின் உச்சத்துக்குக் கொண்டு சென்றது.

துறவறத்தின் பின்னர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசியராகிறார்.இந்தியா தமிழ் நாட்டில் தமிழ் அறிஞர்கள் பலபேர் இருந்தும் – ஈழத்து மைந்தனை எப்படித் தமிழ்ப் பேராளுமையாக அண்ணாமலைச் செட்டியார் கண்டுகொண்டார் என்றால் – அதுதான் துறவறத்தின் வலிமை எனலாம்.

உலகியல் பற்றுக்களையும் அறுத்த சுவாமி மொழியில், சமயத்தில், கலாசாரத்தில், பண்பாட் டில், ஆராய்ச்சியில், சமூகத்தொண்டில் , இசையில், நாடகத்தில் கொண்ட பற்றுக்களை இழந்தாரில்லை. அவற்றில் அவரின் பற்றானது பல்கிப் பெருகி பயனளிக்கும் வகையில் அமைந்தது எனலாம். இவை யாவும் துறவு வாழ்க்கையின் பின் துலங்கியது என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.

எவருமே தொடாத துறை எவருடைய ஆராய்ச்சிக்கும் எட்டாத துறை. அந்தத் துறையைத் தொட்டிருக்கிறார் எங்கள் விபுலானந்தத் துறவி. இப் பராய்ச்சி மலர்ந்ததும் முத்தமிழ் வித்தகரின் துறவின் பின்தான் என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

நரேந்திரன் விவேகானந்தர் ஆனபின்தான் இராமகிருஷ்ண அமைப்பே உருவாகியது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை பல நிலையிலும் நிலை நிறுத்துகிறார். இந்த வழியை எங்கள் முத்தமிழ் முனிவரும் மனத்தில் பதிக்கிறார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் எப்படி துறவறத்தின் பின் எவ்வாறு துலங்கினாரே அப்படியேதான் வித்தகரும் துறவுக்குப்பின் துலங்கி நின்றார் எனலாம்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முதல்தமிழ் பேராசிரியரான பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராயும் அணி செய்கின்றார்.

இலங்கையில் பல பகுதிகளில் கல்விக் கூடங்களை நிறுவினார். ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றிவைத்தார். இலக்கிய கட்டுரைகள், சமய சன்மார்க்கக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், மாநாடுகள் பலவற்றில் பேருரைகள், என்றுமே பயன்தரும்வகையில் பல நயமிக்க, பொருள் பொதிந்த கவிதைகள், கவிதை நூல்கள் என்று பல்துறைகளில் – பன்முக ஆற்றல்களை வெளிப்படுத்திய காலம் முத்தமிழ் வித்தகரின் துறவுக்காலமேதான்.

அதனால்தான் அவருக்கு விழாக்கள் எடுக்கிறோம். அவருக்குச் சிலை வைக்கிறோம். அவர் பற்றிய மலர்களையும் வெளியிடுகிறோம். துறவு என்றால் காட்டுக்குள் ஓடுவதல்ல. துறவு என்றால் சமூகத்தைவிட்டு ஒதுங்கி நிற்பதும் அல்ல. துறவு என்றால் காவியை அணிந்து மொட்டை அடித்து மௌனமாய் குகைக்குள் புகுந்து இருப்பதும் அல்ல. மக்கள் மத்தியில் வாழவேண்டும்.மக்களுக்கு ஏற்ற சேவைகளைச் செய்ய வேண்டும். மொழியை, பண்பாட்டை, கலாசாரத்தை, சமயத்தை, சன்மார்க்கத்தை, அறிவியலை, சமூகத்துக்கு எப்படியாயினும் கொடுக்க வேண்டும் என்பதைத் துறவின் வழியில் நின்று சாதித்தார் என்று ஆஸ்திரேலிய அறிஞர் ஜெயராமசர்மா குறிப்பிடுகிறார்.

இந்தத் துறவற நூற்றாண்டு விழா காலத்தில் அவர் தம் பணிகள் அவனியில் மேலும் வியாபித்து மிளிர வேண்டும்.

**விபுலமாமணி வித்தகர்**
**வி.ரி.சகாதேவராஜா,**
ஆலோசகர் ,
சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றம்,
காரைதீவு.

# மது விற்பனை அனுமதிக்கு எதிராக நெடுந்தீவில் நேற்றுக் கவனவீர்ப்பு





நெடுந்தீவில் மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிராக கவனவீர்ப்புப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது

'நெடுந்தீவு ஊரும் உறவும்' அமைப்பின் ஏற்பாட்டில் அப் பிரதேச மக்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட அமைதி வழியிலான இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அப்பிரதேச மாணவர்கள், இளைஞர்கள், முதியோர்கள், மத குருமார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாதைகளைத் தாங்கியவாறு அவர்கள் பேரணியில் சென்றனர்.

இதேவேளை போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டம் தொடர்பான கருத்தரங்கும் நேற்று நடைபெற்றது.

நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள புனித யுவானியார் ஆலய முன்றிலில் ,ந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இக் கருத்தமர்வில் போதைப்பொருள் பாவனை, குடும்ப வன்முறைகள் மற்றும் மது விற்பனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# என்றும் எரிக்க முடியாத மின் அலை நூலகம்...!

## இன்று உலக புத்தக மற்றும் பதிப்புரிமைகள் தினம்

உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினத்தை மையப் படுத்திய சிறப்புப் பார்வை. எனது பார்வையில் நாட்டுப் புத்தகங்களின் மையமான நூலக நிறுவனம் இந்த உலகின் மிகப்பெரிய தலைவர்களையும் அறிஞர் களையும் சிந்தனை யாளர்களையும் ஆராய்ச்சியா ளர்களையும் உருவாக்குவதற்கு அடித்தளமாக காணப்படுகிறது.

புத்தகங்கள் நூலகத்தையும் வீட்டையும் அலங் கரிப்பவையல்ல. மாறாக மனிதனின் அறிவு வளர்ச்சியையும் அவனது புதுமையை நோக்கிய தேடல்களையும் அலங்கரிப்பவை. புத்தகம் என்பது புதிய உலகை படைப்பதற்கு மிகச் சிறந்த ஆயுதம். இவ்வாறு மகிமை பொருந்திய புத்தகங்களை கொண்டாடும் முகமாக 1995 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் சித்திரை மாதம் 23 ஆம் திகதி உலக புத்தக மற்றும் பதிப்புரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஒருவரின் நடத்தையிலும் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்தும் சாதனமாகிய புத்தகங்களைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இவ் வாறான மகத்தான பணியை நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கும் நூலக நிறுவனத்தின் புத்தகங்களைப் பாதுகாக்கும் செயற்பாடு பற்றிய அனுபவப் பகிர்வாக இப்பத்தி அமைகின்றது.

ஒரு நூலகம் திறக்கப்பட்டால் ஒரு சிறைச்சாலை மூடப்படும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நூலக நிறுவனம் இன்று 19 ஆண்டுகள் கடந்து பல்பரிமாணங்களுடன் தனித்துவமாக மிளிர்ந்து நிற்கின்றது. எவ்வித பாகுபாடுமின்றி இலங்கைத் தமிழ் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்கின்றது.

இவற்றை உலகவாழ் சமுதாயத்தினர் அனைவரும் www.noslaham.org என்ற நூலக வலைத்தளத்தில் இலவசமாக பார்த்துப் பயனடைந்து கொள்ள முடியும். இந்தப் பணியைச் செயற்படுத்தும் இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமாக நூலக நிறுவனம் விளங்குகின்றது.

இலங்கைத் தமிழ் சமூகங்களின் அறிவுத் தொகுதி மற்றும் மரபுரிமைக்குள் உள்ளடங்கும் அம்சங்களில் பிரதானமானது நூல்களாகும். ஆரம்ப காலம் தொட்டு தற்காலம் வரைக்கும் இலங்கை தொடர்பாக

எப்பாகத்திலிருந்தும் அச்சில் வெளிவரும் பல் துறைசார்ந்த நூல்கள் அனைத்தையும் மின் அலை வடிவாக்கி, அவற்றை எவரும் எப்போதும் இணையத் தளத்தில் இலகுவாகப் பெற்றுப் படிப்பதற்கு ஏற்ற வண்ணம் வெளியிடும் சேவையை வழங்கி வருகிறது.

அதாவது இலங்கை சார்ந்து எழுதப்பட்ட நூல்கள், இலங்கை எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நூல்கள், இலங்கை பதிப்பாளர்களால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள், இலங்கையிலுள்ள நிறுவனங்களுக்கு ஊடாக வெளியீடு செய்யப்படும் நூல்கள் போன்றவற்றையே நூலக நிறுவனம் தேடிக் கண்டுபிடித்து அழிவடைந்து போகாமல் ஆவணப்படுத்திப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததி பயன்படுத்தும் வகையில் கையளிக்கும் சேவையை வழங்குகின்றது.

இதனாலேயே இலங்கைத் தமிழ் சமூகத்தினுடைய எழுத்தாவணங்களின் உறைவிடமாகவும், ஓர் அறிவுக் களஞ்சியமாகவும் எனது பார்வையில் நூலக நிறுவனம் காட்சியளிக்கின்றது.

நூலக நிறுவனமானது கள ஆய்வாளர்கள், செயற்றிட்ட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஊடாக நூல்களை சேகரிக்கின்றது. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற நூல்கள் இலங்கை தொடர்பானது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் துப்பரவு செய்யப்பட்டு, எண்ணிமப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்படும்.

தொடர்ச்சி▼

# என்றும் எரிக்க முடியாத மின் அலை நூலகம்...!

**தொடர்ச்சி▲**

ஆவணப்படுத்திய அனைத்து நூல்களையும் உடனடியாகப் பதிவேற்றம் செய்வதில்லை. எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்களின் அனுமதியோடுதான் நூலக வலைத்தத்தளத்தில் நூல்களை பதிவேற்றம் செய்து வருகின்றது.

நூல்களை பதிவேற்ற உரிய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்களை தேடிக் கண்டுபிடித்துத் தொடர்பு கொள்வது இலகுவான காரியமன்று. ஆனாலும் இந்த நிறுவனம் சளைக்காது முயற்சியெடுத்து அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றது.

இதுவரைக்கும் (21.04.2024) இந்த நிறுவனமானது 8 ஆயிரத்து 392 ஈழத்து எழுத்தாளர்களின் அனுமதியையும் 6 ஆயிரத்து 742 பதிப்பாளர்களின் அனுமதியையும் பெற்றுக் கொண்டு புத்தகங்கள் நூலக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.

நூலக நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரைக்கும் பல செயற்றிட்டங்கள் ஊடாகப் பல்துறைசார் நூல்களை ஆவணப்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கை தொடர்பாக அச்சில் வெளிவந்த 18ஆயிரத்து 716 புத்தகங்களை கண்டுபிடித்து மின்வடிவில் நூலக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.

பதிவேற்றிய நூல்களைக் காலந்தாழ்த்தாது இலகுவாகத் தேடி வாசிக்கக் கூடிய வசதிகளையும் இந்த நிறுவனம் வாசகர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது. வாசகர்கள் நூலக வலைத்தளம் ஊடாக நூல்களை தேடுகின்ற போது புத்தகத்தினுடைய பெயர், எழுத்தாளர்களின் பெயர், பதிப்பாளர்கள், புத்தகம் வெளியிடப்பட்ட ஆண்டு மற்றும் குறிசொற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தேடி இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணமாக ஹரிஷாந் என்ற எழுத்தாளர் எழுதிய புத்தகத்தை பார்க்க வேண்டுமானால், எழுத்தாளர்களின் பெயரினுடைய முதலெழுத்தை மாத்திரம் அகர வரிசையின் ஒழுங்கு முறைப்படி வடிவமைத்து வைத்திருக்கின்றார்கள்.

அதில் "ஹ" வரிசையில் சென்று இலகுவாக அடையாளம் கண்டு அவர் எழுதிய புத்தகங்களை பார்த்து பதிவிறக்கி வாசிக்க முடியும். அத்தோடு மிக அவசியமான தேவைக்கு ஒரு புத்தகம் தேவைப்பட்டால் எங்கு தேடினாலும் எவ்வளவு பெறுமதியானதாக இருந்தாலும் சிலவேளை கிடைக்காமல் போகலாம். ஆனால் அவ்வாறான மிகப்பெறுமதியான புத்தகங்களை நூலக வலைத்தளத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியை அனைவருக்கும் ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது, விழிப்புலனற்றோருக்காக நூல்களை ஒலிப் பதிவு செய்து ஒலி நூல்களாகவும் வாசகர்களுக்கு வழங்குகின்றது.இவ்வாறாக இந்த நிறுவனத்தின் நூல்களை ஆவணப்படுத்தி பாதுகாக்கும் மகத்தான சேவையை உலகவாழ் சமுதாயத்தினர் பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரது கல்வித் தேவைகளையும் அறிவு விருத்தியையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு இந்த நூல்கள் உறுதுணையாக அமைகின்றது.

நூலகம் வலைத்தளத்தைப் பயன்படுத்துபவர்கள் தமக்கு தேவையான நூல்கள் பற்றி அறிந்து கொள்ளவோ குறிப்பிட்ட தகவல்கள் தேவை போன்ற ஏதாவது உதவிகளுக்கு உசாத்துணைப் பகுதி ஒன்று வடிவமைத்து வைத்துள்ளது. அதற்குள் சென்று குறித்த தேவையை குறிப்பிட்டு மின்னஞ்சல் முகவரியையும் கொடுத்தால் அதற்கான பதிலை நூலக நிறுவனத்தின் பணியாளர்கள் அனுப்புவார்கள்.

ஒவ்வொரு துறை சார்ந்தும் வெளியான எல்லா வெளியீடுகளையும் ஆவணப்படுத்தினால்தான் வாசகர்கள் முழுமையான உச்சப் பயனை அனைவரும் பெற முடியும். இதற்கு எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் இந்த நிறுவனத்தோடு கைகோர்ப்பது மிக அவசியமானதாகும்.

நான் அறிந்தவரையில் சில எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்கள் தங்களது நூல்களை ஆவணப்படுத்திப் பாதுகாப்பதற்காக நூலக நிறுவனத்தை தொடர்பு கொள்வது வரவேற்கத்தக்கது. ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் நூலக நிறுவனத்துடன் இணைந்து தமது நூல்களையும் பதிவேற்ற வேண்டுமென்றால் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள அலுவலகத்திலும் மட்டக்களப்பு அரசடியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்திலும் நேரடியாகச் சென்று தொடர்பு கொள்ளலாம். அல்லது 9421223 1292, 94761625485 எனும் தொலைபேசி எண்களிலும் noslahamfoundation@gmail.com எனும் மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த நிறுவனமானது எழுத்தாவணங்களில் புத்தகத்தை மட்டுமல்ல. ஏனைய எழுத்தாவணங்களான இதழ்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள், சிறப்பிதழ்கள், நினைவு மலர்கள், அறிக்கைகள் என்பன போன்ற அனைத்தையும் சுருக்கமாக கூறினால் இலங்கை தமிழ் சமூகம் தொடர்பான அத்தனை அம்சங்களையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்கும் முக்கிய பணியை மேற்கொண்டு வருகின்றது.

இது சம்மந்தமாக ஆவணப்படுத்த விரும்புபவர்களும் இந்த நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள முடியும்.

அத்தோடு நூலகச் செயற்பாடுகளில் தன்னார்வலர்களாக இணைந்து கொள்ள விரும்புவோரும் நேரிலோ, மின்னஞ்சலூடாகவோ, தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிந்திருக்கின்றேன்.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலக நிறுவனத்தின் வலைத்தளத்தை யாரும் எரித்து விடவோ அழித்துவிடவோ முடியாது என்பதால் காலா காலத்துக்கும் இது பாதுகாப்போடு இருந்து தொடர்ச்சியாகப் பயனளித்துக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இறுதியாக இன்று உலக புத்தக தினத்தைக் கொண்டாடும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள், வாசகர்களுக்கும் முக்கியமாக மிக மகத்தான சேவையாற்றும் நூலக நிறுவனத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ப. ஜோன் டிலக்ஷன்,**
சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை.

# இன்றைய ராசி பலன்கள் - 23.04.2024

## மேஷம்

இன்று நீங்கள் புதிய கட்ட வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். முறையான திட்டமும் தொழில் சார்ந்த அணுகுமுறையும் உங்கள் முயற்சியில் வெற்றியை ஏற்படுத்தும்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள். உங்கள் தரத்தை உயர்த் துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

## ரிஷபம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி செலுத்துவீர்கள். இதன் மூலம் திருப்தியான பலன் கிடைக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி காண்பீர்கள். சக பணியாளர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான முறையில் உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இது நல்லுறவு ஏற்பட வழி வகுக்கும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். திருப்திகரமான நிலை பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று ஏற்படும் பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப் படுத்த வேண்டும். எதிர்மறை எண் ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நம்பிக்கை உணர்வின் மூலம் நற் பலன்களைப் பெறலாம்.

இன்று மன திடமும் நம்பிக்கையும் வேண்டும். இதன் மூலம் தடைகளைசமாளித்து உங்கள் பணிகளை ஆற்ற முடியம்.

உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் தேவையற்ற பேச்சுக்களை பேசுவீர்கள்.

இன்று பணம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருப்பதாக உணர இயலாது.

## கடகம்

இன்று உங்களிடம் காணப்படும் உத் வேகம் காரணமாக நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்கள் நலத்திற்கான பயனுள்ள முடிவை விரைவாக எடுக்கும் வகையில் உங்கள் மனநிலை இருக்கும்.

உங்களிடம் இருக்கும் சிறப்பான தகுதி காரணமாக இன்று உங்கள் செயல்களை சிறப்பாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் ஓடும் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரி டையேயான உறவு மேம்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாகவும் மகிழ்சிகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க காண்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

## சிம்மம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை நேர்மை யான முயற்சி மூலம் அடைவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும்.

உங்கள் பணியில் நல்ல பெயரெடுப்பீர்கள். உங்கள் பணி செய்யும் முறை காரணமாக உங்கள் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்குவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இன்று அதிக பண வரவு காணப்படும்.

## கன்னி

இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சிறிது பாது காப்பின்மை உணர்வும், குறைந்த மகிழ்ச்சியும் காணப்படும். எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் நீங்கள் உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்களிடம் இன்று சிறந்த மன நிலை காணப்படாது.எனவே இன்று இருவரும் பேசுவதை தவிர்ப்பது நல்லது. இன்று உங்களால் பணத்தை பயனுள்ள வகையில் செலவழிக்க இயலாது. பண வரவு காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

## துலாம்

உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்றைய நாள் சிறப்பாக அமைய இன்று பொறுமை அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

இன்று உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் நல்ல புரிந்துணர்வு ஏற்பட குறைந்த வாய்ப்பே உள்ளது. இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்றைய நாளை பயனுள்ள முதலீடுகள் செய்ய பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

இன்று சம்பவங்களை சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் வளர்ச்சியை தடுக்கும் எந்த உணர் விற்கும் இடம் கொடுக்கக் கூடாது. உங்கள் அணுகுமுறையில் விவேகம் வேண்டும்.

பணியிடச் சூழல் குறைந்த அனுகூலத்துடன் காணப் படும். சகபணியாளர்களுடன் பிரச்சினை காணப்படும். திட்டமிட்டு பணிகளை திறமையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள இயலாது. நீங்கள் இன்று சிறிய விஷ யங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இது நல்லுறவை பாதிக்கும்.

இன்று பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகளும் காணப்படுகின்றது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.04.2024




உங்களின் சொந்த முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். அதே சமயத்தில் திருப்தி குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை விரும்பி ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையை சந்திப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். இது உங்கள் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட உதவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்யப் பயன்படுத்துவீர்கள்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று தடைகளும் தாமதங்களும் நிறைந்து இருப்பதாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிகள் சுமூகமாக நடக்க சகபணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் சண்டையில் ஈடுபட வாய்ப்புள்ளது. அதனால் திருப்தியான மனநிலை காணப்படாது.

இன்று தேவையில்லாத செலவுகள் காணப்படும். வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

கால் வலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வாக இருக்க வேண்டும்.




இன்றைய செயல்களை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். இதனால் உங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். எனவே உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் அவசியம்.

இன்று உங்கள் பணிகள் சுமூகமாக நடக்காது. உங்கள் சக பணியாளர்களிடம் அமைதியை கையாளவும்.

உங்கள் துணை உங்களை புறக்கணிப்பதாக எண்ணுவீர்கள். அதனால் எரிச்சல் உணர்வை துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் மனதில் குழப்பம் காணப்படும். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் அதனை பயனுள்ள வகையில் பயன்படுத்த இயலாது. கண்கள் மற்றும் தொண்டையில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




உங்களிடம் உறுதி இருந்தால் இன்று வளர்ச்சி காண்பீர்கள். நம்பிக்கையுடன் இருந்தால் வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்கள் பணியில் பிரதபலிக்கும்.

இன்று மகிழ்ச்சியான மாலைப் பொழுதாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் கானப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலை பொதுவாக சிறப்பாக உள்ளது. என்றாலும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய கடன் வாங்க நேரலாம். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் நேர்மறையான மனநிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




